
# காஞ்சிபுரம், ஸ்ரீ சங்கரா கல்லூரியில்
# சைவசித்தாந்தம் பட்டய வகுப்பு
# ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரியாரால் தொடக்கிவைக்கப்பெற்றது





*செய்திக்குறிப்பு*

*ஜூலை, 4*

*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் கல்வி அறக்கட்டளையால் நடத்தப்பெறும் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்ற தன்னாட்சிக் கல்லூரியான ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை இணைய வழியாகவும் நேரடியாகவும் நான்கு தாள்கள் கொண்ட, ஓராண்டுகாலம் படிக்கத்தக்கதான 'சைவசித்தாந்தம்' பட்டயப்படிப்பை நடத்தவுள்ளது. அதன் தொடக்கவிழா வெகுவிமர்சியாக **04.07.2021** ஞாயிறு அன்று இணையவழியாக நடைபெற்றது.*

*இதில் இணையவழியாகக் கலந்துகொண்ட **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** சைவசித்தாந்தப் பட்டையப்படிப்புக்கான பாடத்திட்டக் கையேட்டினை வெளியிட விசுவ இந்து பரிஷத் தலைவர் **வேதாந்தம்ஜி** அவர்கள் பெற்றுக்கொண்டார்.*




*பின்னர் **ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள்** ஆற்றிய ஆசியுரை பின்வருமாறு :*

*இன்றைய தினம் மாலை நேரத்திலே ஞானமூர்த்தி நட்டமாடி நவிலும் இடமாகிய சாயுங்கால நேரத்திலே பிரதோஷ காலத்திலே சித்தாந்த வகுப்பு தொடங்குவதாக அமைந்திருக்கிறது. எந்தப் படிப்பை மடாலயங்கலிலேயும் ஆதீனங்களிலேயும் கோயில்களிலேயும் இல்லங்களிலேயும் சகஜமான*

இயற்கையான முறைகளிலே பயின்றுவந்தார்களோ அதை இன்றைக்கு ஒரு பட்டப் படிப்பு அல்லது பட்டையப் படிப்பு என்பதாக ஒரு பாடத்திட்டம் வகுத்து பொதுமக்களிடத்திலே எடுத்துச்செல்லக்கூடிய சூழ்நிலையும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.குறுவை அறுவதுநாள் பயிர்போல இன்றைக்கு சாகுபடி ஆகிறது. ஐந்து வருஷம், பத்து வருஷம் என்பதெல்லாம் இன்றைக்கு அறுவடையாகாது. இன்றைய சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இதையும் இணையவழியாக நடத்தும் இந்தசூழல் ஏற்பட்டிருக்கிறது.

மதம் என்பது பற்றிய புரிதல் முதலிலேயே தேவைப்படுகிறது. பதிவுசெய்யப்பெற்ற அமைப்புகள் எல்லாம் கட்சி என்று சொன்னால், சமூகம் அனைத்தும் மதம் என்று நாம் போற்றத்தொடங்கினால் மதம் என்பதின் அர்த்தத்தை நாம் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

நம் பெரியவர்கல் சொன்னது போன்று பிற மார்கங்கள் தோன்றாத காலத்திலிருந்து அநாதியாக வரக்கூடிய இந்த சனாதன தர்மம் என்பது அபிராயம், அதாவது முனிவர்களுடைய அபிப்ராயம், வேதங்களுடைய அபிராயம், கருத்து என்கிற விதத்திலே மதம் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. போற்றப்பட்டது.

வேதங்களை, சாஸ்திரங்களை, புராணங்களை இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒரு சனாதன தர்மம் செயல்பட்டுவருகிறது. இந்த அறுவகை சமயங்கள் குறித்தும் சைவம் குறித்தும் இவைகளுக்குள் பிணக்குகள் எதுவும் இல்லை இவைகள் இணக்கமாக இயங்குகின்றன என்பது குறித்தும் சமீபத்திலே கம்பவாரிதி (இலங்கை ஜெயராஜ்) அவர்கள் தினமணி நாளிதழிலே தொடர்ந்து எழுதிவருகிறார்கள். 'வாரிதி' என்றால் கடல் என்றொரு அர்த்தம். இன்னொரு அர்த்தம் பாலம் என்பது. அதற்கேற்பவே அறுவகை சமயத்திற்கும் சைவத்துறைக்கும் ஒரு பாலமாக இருந்து நல்ல ஒரு புரிதலை ஏற்படுத்தி வருகிறார்கள்.

அந்த காலத்திலே பட்டையங்கள் மூலமாக தான தர்மங்கள் வழங்கப்பட்டன. இன்றைய காலத்திலே பட்டையங்கள் (சான்றிதழ்கள்) வாயிலாக படிப்புகள் வழங்கப்படுகின்றன.

புண்ணியமான கங்கை கரரையிலே பல படித்துறைகள் இருக்கின்றன. அதுபோலே சமயத்துறையிலே பல படிப்புத்துறைகள் இருக்கின்றன. ஸங்கீதம் என்ற படிப்புத்துறை ஒன்று; அதே போல சைவசித்தாந்தம் என்றப் படிப்புத்துறை ஒன்று; அதே போல திருமூலர், பதஞ்சலி முனிவர்கள் சொன்ன யோக அனுஷ்டானம் அது ஒரு படித்துறை. இப்படி பலப்படித்துறைகளில் ஸ்நானம் பண்ணினாலும் அது கங்கை ஸ்நானம்தான். அதேபோன்று நமது புனிதமான தர்மத்தைத் தெரிந்துகொள்வதற்கு பல வழிமுறைகளை நாம் கையாண்டு, இந்த புண்ணியத்தைப் பெற்றுவருகிறோம்.



இங்கு வெளியிட்டிருக்கக்கூடிய பாடத்திட்டத்தின் வாயிலாகப் பார்க்கலாம். இதிலே சிறப்பான முறையிலே இந்த பாடத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதிலே குறிப்பிடப்பெற்றுள்ள மேற்பார்வை நூல்கள் பல சொல்லியிருக்கிறார்கள். அதிலே அருணைவடிவேல் முதலியார் எழுதிய புஷ்தகங்களும் வச்சிரவடிவேல் முதலியார் இயற்றிய புஷ்தகங்களும் காஞ்சீபுரத்தோடு தொடர்புடையவை. அந்த இரண்டு பேருக்கும் காஞ்சி காமாட்சியம்மன் திருவிழா காலத்திலே, அதாவது தமிழ்ப் புத்தாண்டு தினத்திலே தங்கரதம் புதியதாகத் துவக்கப்பட்ட நேரத்திலே நமது இரண்டு பெரியவர்களும் ஆசிர்வதித்து அந்த இரண்டு பெரியவர்களுக்கும் 'திருமுறை உரைமணி' என்பதாக விருதை வழங்கி, பவுன் காசையும் வழங்கி கௌரவித்தார்கள். அவர்களின் நூல்கள் இதிலே இடம்பெற்றுள்ளன.

அதேபோல, தேவசேனாபதி என்பவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு முக்கியப் பொறுப்பிலே இருந்தவர். அவரும் காமக்கோட்டம் என்பதான ஒரு நூலை எழுதியிருக்கிறார். நமது பெரியவர்களுக்கு மிகவும் பரிச்சியமானவர்கள். அவர்களின் நூல்களும் இதிலே இடம்பெற்றிருக்கின்றன. இப்படி, தொண்டு உள்ளத்துடன் ஸ்ரீ மடத்துடன் தொடர்புள்ள இம்மூவரின் நூல்களும் இதிலே இடம்பெற்றிருக்கின்றன. விரிவான முறையிலே இந்த பாடத்திட்டம் தயாரிக்கப்பெற்றிருக்கிறது.

இதிலே இந்த சைவசித்தாந்தம் என்பது முக்கியமான ஒன்று. அந்த சைவசித்தாந்தத்தை நாம் இரண்டுவிதமாகப் பார்க்கலாம். ஒன்று, ஞானபாகம், இன்னொன்று அனுஷ்டான பாகம். சைவ ஆகமத்திலே சரியா பாகம், கிரியா பாகம், யோக பாகம், ஞான பாகம் என்று வகைபடுத்தியிருக்கிறார்கள். இதை அறிவு பூர்வமாகத் தெரிந்துகொளவது என்பது ஒன்று. உணர்வுபூர்வமாகத் தெரிந்துகொள்வது என்பது இன்னொன்று.ஆக, இரண்டு ரீதியாகவும் இந்த பாடத்திட்டம் பலனை அளிக்கும் என்பது ஒன்று. அதுபோக, சைவம் என்ற சொல்லுக்கு நாம் மிகப்பெரிய அர்தத்தைச் சொல்ல முற்படலாம். சைவம் என்றால் சமயச்சின்னங்களை, புறச்சின்னங்களை அணிவது என நிறுத்திக்கொள்ளாமல், அல்லது ஜபம், சாஸ்திரம் என்ற நிலையில் நிறுத்திக்கொள்ளாமல் சைவம் என்பது சிவனையும் தாண்டி அனைத்து தெய்வ வழிபாட்டு முறைகளையும் சாத்வீகமான முறையிலே வழிபாடு செய்து புண்ணியத்தைப் பெறுவது.

காணாபத்தியமாக இருக்கலாம்; கௌமாரமாக இருக்கலாம்; வைஷ்ணவமாக இருக்கலாம்; சாக்தமாக இருக்கலாம்; சௌரமாக இருக்கலாம். இப்படி அனைத்து வழிபாட்டு முறைகளிலேயும் சாத்வீகமான முறையிலே வழிபாடு செய்து புண்ணியத்தைப் பெறுவது சைவம்.

அதாவது கோரம் அகோரம் என்பதாக அந்த இறைவனுக்கு இரண்டு முகங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி பல்வேறு மூர்த்தங்களாக உள்ள பல்வேறு தலங்களுக்கும் சென்று சாத்வீகமான முறையிலே அனைத்தையும் ஒருங்கிணைதவர் ஆதிசங்கரர். வழிபடக்கூடிய தெய்வங்கள் சாத்வீகமாக இருக்கின்றது. வழிபடக்கூடிய முறைகளும் சாத்வீகமாக இருக்கவேண்டும் என்று அந்த வழிபாட்டு முறையிலே சைவத்தைக் கொண்டுவந்தவர் ஆதிசங்கரர். ஆகவே, சாஸ்திரியமான முறையிலே வழிபாடு அமையவேண்டும். சாத்வீகமான முறையிலே வழிபாடு அமைய வேண்டும். அவசரகதியிலே அமையக்கூடாது. பாதிப்புகள் அற்றதாக அந்த வழிபாட்டு முறைகள் அமையவேண்டும் என்று பூஜா முறைகளை செம்மைப்படுத்தியவர் ஆதிசங்கரர். ஆகவே இந்த மதங்கள் என்பவை சைவ முறையிலே இயங்க வேண்டும். எண்ணிக்கை அடிப்படையிலேயோ நிறைய அறுவடை செய்வோம் என்றெல்லாம் இல்லாமல் நல்ல முறையிலே சமயத்தைப் பரப்ப வேண்டும்.

மனிதனது மனத்திலே சித்த சுத்தி ஏற்படவேண்டும்; நல்ல சங்கல்பங்கள் ஏற்படவேண்டும்; அறம் பொருள் இன்பம் வீடு என்கிற பேற்றினைப் பெறவேண்டும் என்ற சமயங்கள் தோன்றியதான அந்த முக்கிய நோக்கம் நோகாமல் இருப்பதற்கு இந்த சமயக் கல்வியை தற்போது கோவில்களிலேயும் ஆசிரமங்களிலேயும் ஓரளவிற்கு நடைபெறுகிறது. அதை ஆரம்ப பாடத்திலிருந்து சமயத்தின் வரலாறு, சமயத்தின் நோக்கங்கள், சமயத்தின் வழிபாட்டு முறைகள், அனுஷ்டானங்களோடு நின்றுவிடாமல் அதன்

அவசியத்தையும் உணர்த்தும் விதமாக நல்ல சமயப் பாடத்திட்டங்களை இன்றைய விஞ்ஞானக் கண்ணோட்டத்தையும், இன்றைய சமுதாயக் கண்ணோட்டத்தையும் மனதிலே கொண்டு, சாஸ்திரங்களுடைய தன்மையும் அதன் மகிமையும் குறையாத விதத்திலே நல்ல முறையிலே இந்த சமய வகுப்புகளை நடத்துவதன் மூலமாக அந்த சைவ உணர்வு என்பது வலுப்படும்.

பல லட்சம் வருஷங்களாக இந்த இந்து தர்ம சனாதன தர்மம் இருந்துவருகிறது. ஆனால் ஒரு நூறு வருஷ பெருமுயற்சியின் காரணமாக ஒரு பெரும் சக்தியாக ஒரு சமூகத்தைக் காட்ட முயற்சியும் நடக்கிறது. நமது சனாதன தர்மத்தின் சக்தி என்பது ஆத்ம சக்தி. ஆதம தரிசனம் என்கிற இந்த இந்து சமயத்தினுடைய சைவத்துறையினுடைய இந்த பண்பாட்டினை மக்களிடத்திலே கொண்டுசெல்வதற்கு முதலிலே இந்த சைவ சித்தாந்தத்தை வலுப்படுத்தி, அதன்மூலமாக, பல்வேறு வழிபாட்டு முறைமைகளிலும் சைவத் தன்மையை உண்மையை நேசிப்போம் நம்முடைய தர்மத்திலே உவகை கொள்வோம் பஞ்ச பூதங்களை ஆராதிப்போம் அனைவரையும் நேசிப்போம். சைவம் என்று வருகிறபோது விரோதிப்போம் என்பது இல்லை. எல்லோரையும் நாமாகப் பார்க்கக்கூடியதான பக்குவத்தை, மிருது தன்மையை, இனிய இலகுத் தன்மையை நாம் மேன்மேலும் வலுப்படுத்த வேண்டும். அதற்கு இந்த பாடத்தை ஒரு பாடத்தைத் தொடக்கமாக கருதவேண்டும்.

நான் யார் என்பதாக ஆராய்வதாக ரமண மகரிஷிகள் குறிப்பிட்டார்கள். நாம் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது. நாம் எந்தக் கலாச்சரத்தைப் பின்பற்றுகிறோம் என்பதை அறியவேண்டும். அனைவரும் பொது விஷயத்திலே ஆன்மீக விஷயத்திலே ஒன்றுபடவேண்டும். சமயம் என்பது என்ன? அது எந்த அளவு பயன்படுகிறது/ அது ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு மாத்திரமாக அன்றி உலக அளவில் உபயோகப்படக்கூடியது என்பதை உணரவேண்டும்

எப்படி பஞ்ச பூதங்கள் இந்த உலகத்திற்கு உதவுகின்றனவோ அப்படி சமயம் என்பது அனைவரையும் ஜீவிக்க வைப்பதாகிய சஞ்சீவியாக விளங்குவது; உயிரோட்டத்தோடு நிலைநிறுத்துவது என்று புரிந்துகொள்ள வேண்டும். மேலோட்டமாக பொருள்கொண்டு சின்னத்தோடு நிறுத்திக்கொண்டுவிட்டால் சினம்தான் வளர்ந்துகொண்டிருக்கும். ஆகவே, பரந்த நிலையில் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த வகையில்தான் நமது பெரியவர்கள் நமது ஆஸ்தான புலவர் சிவசெந்தில்நாதன் வாயிலாக பல சமய நூல்களை வெளியிட்டார்கள். சிறியவர் முதல் பெரியவர் வரையிலே பலரும் அறியும் வகையிலே வினா விடை அமைப்பிலேயேயும் சமயக்களஞ்சியம் முதலான பல நூல்கள் வெளியிடப்பட்டன.

இப்படி நமது ஸ்ரீ காஞ்சிமடத்தின் இந்து சமய மன்றத்தின் சார்பிலே ஒவ்வொரு நாளும் திங்கட்கிழமைகளிலே உபமன்யு பக்தவிலாசம் அதாவது வடமொழியிலே அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை விவரிப்பதான நூல் இருக்கிறது. பக்தர்களின் சிறப்புகளைச் சொல்லுவதான அப்புராணச் செய்திகலைச் சொல்லும் நிகழ்வு; செவ்வாய்க்கிழமைகளிலே அம்மனின் சிறப்புகளைச் சொல்லக்கூடிய நிகழ்வு; இப்படி, ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல சமய சொற்பொழிவுகளைக் கேட்கும் விதத்திலே ஏற்பாடாகியுள்ளது. வேதாந்தத்திலே சிரவணம் என்பார்கள். பாடம் கேட்டல் என்பது முக்கியமானது அந்த வகையிலே அந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்திருக்கிறார்கள்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தோன்றியதல்ல சமயங்கள்; திருவள்ளுவர் குறிப்பிடுவது போன்ற அதிகாரத்தைக் காப்பதற்காக ஏற்பட்டது. இங்கே அதிகாரம் என்றால் யோக்கிதாம்சம். யோக்கிதாம்சம் என்றால் இதற்குத்தகுதியானவர்; இதற்குப் பொருத்தமானவர் என்ற அதிகாரம். இவர் பாடக் கேட்பதற்கு அதிகாரி என்றால் இவர் பாடம் கேட்பதற்குத் தகுதியானவர் என்பது அர்த்தம். அந்த அதிகாரிகளை உருவாக்குவதுதான் சம்யத்தின் நோக்கம்.

நல்லதொரு சுபாவம், நல்லதொரு தன்மை உலகத்திலே நிலவவேண்டும் என்பதற்காக, அனைவரும் மனிதத்தன்மையோடு நடந்துகொள்ளவெண்டும் என்பதற்காக அவ்வறு மனித நேயத்தோடு நடந்துகொண்டால் தெய்வத்தன்மை எய்தலாம் என்ற படிகளைப் போன்று பல்வேறு படிகளைக் கடந்து இறைவனின் சாயுச்சியத்தை அடைவதற்கு வழிகாட்ட தோன்றியவை சமயங்கள்.

அறிவை மாத்திரம் பிரதானமாக நினைக்காமல் அறிவையும் அனுஷ்டானங்களையும் அனுபூதியையும் சேர்த்து பொதுமக்களுக்குச் சொல்லும் போது மிகுந்த பலன் தரும். அந்த வகையில் இந்த படிப்பு அமைய வேண்டும்.

இந்த சைவசித்தாந்தத்தை நடத்தும் ஸ்ரீ சங்கரா கல்லூரியின் வாயிலாக பல நல்ல நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலே நாம் தற்போது அதிகம் வலியுறுத்தி வருவதான தலபுராணங்கள் குறித்த பதிவு முக்கியமானது.
தலபுராணங்கள் என்பவை தமிழகத்தினுடைய பிரத்தியேக சிறப்பைத் தெரிவிக்கக்கூடியவைகள். இந்த தமிழகம் என்பது முனிவர்களின் அகம். அதாவது வீடு. முனிவர்கள், சித்தர்கள், யோகிகள், பல்வேறு ரிஷிகள் எல்லாம் பூஜித்த ஸ்தலங்கள். இவற்றைப்பற்றியெல்லாம் அந்த ஸ்தல புராணங்களிலே காணக்கிடைக்கின்றன. ஸ்தல் விருட்சங்களின் பெருமைகள், தீர்த்தங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் சரியான வரலாறை, நம்மவர்கள் எழுதிய நம்முடைய வரலாறை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த ஸ்தல புராணங்கள் எல்லாம் பதிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இந்து சமயத்திலே பிரச்சாரம் என்பது கடைசியாகத்தான் கொள்ளப்பெற்றுள்ளது.

*மன்ற வாணனை மனத்திடை நிறுவிவண் டுறைசை*
*வென்ற சீர்நமச்சிவாயமெய்க் குரவனை யிறைஞ்சி*

என்று தர்க்கசங்கரகம் என்ற நூலினை மாதவ சிவஞானமுனிவர் தமிழ்ப்படுத்தியிருக்கிறார். அதில், குருவணக்கம் என்றால் என்ன, ஈஷ்வர பக்தி என்றால் என்ன என்று சம்ஸ்கிருதத்தில் என்ன சொல்லியிருக்கிரார்களோ அப்படியே தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதை மொழியப் பெயர்த்துடக் கூடாது இப்போ. தமிழைப் பற்றி சமஸ்கிருதத்திலேயும் சம்ஸ்கிருதத்தைப் பற்றி தமிழிலேயும் பல நூல்கள் வந்திருக்கின்றன. அதற்காக ஆத்திரேய தமிழ்ப் பேரவை என்பதாக ஒன்று ஆரம்பிக்கப்பெற்றது. ஆதிசங்கரர் ஆத்ரேய வம்சத்தைச் சார்ந்தவர். சம்ஸ்கிருதம் படிப்பவர்களும் தமிழ்ப் படிப்பவர்களும் இருமொழியில் உள்ள இலக்கண இலக்கியங்களைப் பரிமாறிக்கொள்வதற்காக சேர்ந்து சிந்திப்பதற்காக அது ஆரம்பிக்கப்பெற்றது. இரண்டு கருத்தரங்கங்கள் நடைபெற்றன அதிலே. தமிழ்க் கடல் கோபாலையர், பாண்டிச்சேரி, அவர்களெல்லாம் கலந்துகொண்டார்கள். சமஸ்கிருத அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டனர் அதிலே. இடையில் அது தடைபெற்றுள்ளது. திரும்ப அது ஆரம்பிக்க வேண்டும். அதேபோல, சென்னை சேத்துப்பட்டிலே சங்கராலையத்திலே ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமிழ்ப் பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. இதிலே அருணை வடிவேல் முதலியார் அவர்களுடைய புதல்வர் பாலறாவாயன், ம.வே. பசுபதி, இன்னும் பலர் கலந்துகொண்டு அந்த பழைய தமிழை மீட்டெடுக்கவேண்டும் என்பதற்காக இலவசமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது சில வருஷங்களாக. 'மதியால் வித்தகனாகி, மனதால் உத்தமனாகி' என்று திருப்புகழின் கருத்தினை வலியுறுத்தும் வகையிலே அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனை ஆரம்பிக்கும்போது மயிலம் மகாவித்வான் வே. சிவசுப்பிரமணியன் அவர்கள் நடத்திக்கொண்டிருந்தார்கள். தற்போது பிறர் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழைக் காக்கவேண்டும்; தமிழ் இலக்கணத்தைக் காக்கவேண்டும்; தமிழர்களுடைய இலக்கணத்தைக் காக்கவேண்டும். மொழியின் இலக்கணம் மொழிவழி வந்த நம் அன்பர்களின் இலக்கணம் இரண்டையும் நல்ல முறையிலே காக்க வேண்டும்.

சமயங்களுக்கு எடுத்துக்காட்டாக இந்து சமயம் விளங்குகின்றது. அதில் பிரதான அம்சமாக இந்த சைவ பக்தி இடம்பெறுகிறது.

ஆதிசங்கரரைப் பற்றி இப்படி குறிப்பிடுவார்கள்;

*அந்த சாஸ்தகா*
*பஹி சைவகா*

*விவகாரேஜ வைஷ்ணவகா*

*மனதிலே அம்பாளை தியானம் செய்துகொண்டிருப்பார். வெளியிலே திருநீறு, உத்திராட்சம் அணிந்து சைவமாக காட்சியளிப்பர். தம்மை நம்ஸ்கரிப்பவர்களுக்கு நாராயணா என்று சொல்லி வாழ்த்துவார். இப்படி இணக்கமான, இதமான, புன்சிரிப்பும், முன்சிரிப்பும் கூடிய மிருதுத்தன்மையான தன்மை இந்து சமயத்திற்கு இருக்கின்றது. அது மிருது என்பதனால் நாம் அதை ஏளனமாக நினைக்கக்கூடாது. ரசமாக ஒரு கவி சொல்லுவார் மிருதுவாக இருக்கிறது என்பதினால் ராகு சந்திரனை அடிக்கடி பிடிக்கிறான்; தீவிரமாக இருப்பதால் சூரியனை எப்போதாவதே பிடிக்கிறான் என்று. நாம் மிருதுவாக இருப்பதோடு கொள்கையிலெ தீவிரமாக இருக்க வேண்டும். எமது சமயத்திலே உறுதியான பற்றை வைக்க வேண்டும்.*

*மனித சமுதாயம் அனைத்திற்குமான நல்ல குணங்களையெல்லாம் கொடுள்ள நமது சமயத்தின் பெருமிதங்களை இளைஞர்களிடத்திலே எடுத்து சென்று, நம் சமயத்தால் அவர்கள் பெருமிதம் கொள்கிற உணர்வை ஏற்படுத்தும் விதமாக பிரச்சாரம் தேவைப்படுகிறது. உள்ளுக்குள்ளே இருந்தால் தவத்திற்கு வலுசேர்க்கும். சமுதாயத்திற்கு வலுசேர்க்க பிரச்சாரமும் தேவை.*

*இந்துசமயத்தைப் பொருத்தவரையிலே, பிரச்சரம் என்பது கடைசியிலே. முதலிலே நாம் படித்தல், படித்ததை உணர்ந்துகொள்ளுதல், உணர்ந்துகொண்டதைச் செயல்படுத்துதல், நான்காவது தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் அறியச் செய்தல். பிரச்சாரம் செய்தல். அதீதி – போத – ஆச்சரன – பிரச்சாரனை என்பதாக நான்காவது நிலையிலே பிரச்சாரத்தைச் சொல்வார்கள். ஆனால் இன்றைய நிலையிலே பிரச்சாரமும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. இந்து இசத்திலே நிறைய விஷயம் இருக்கிறது. விநியோகம் தேவைப்படுகிறது. அதற்கு யோகம் வேண்டும். யோகம் என்றால் சேர்க்கை. அதற்கு படித்தவர்களும் படிக்கவேண்டியவர்களும் சேரவேண்டும். அதற்கு ஒரு நியோகம் தேவை. நியோகம் என்றால் ஒரு ஏற்பாடு; ஒரு உத்தரவு; ஒரு அமைப்பு; ஒரு வசதி தேவை. ஆகவே இந்த வாய்ப்பை உபயோகப்படுத்தி இணைய வழியிலே இணைந்து, பயன்பெற வேண்டும்.*

*நம்மைப் பொருத்தவரை கூட்டமும் காட்டமும் தேவையில்லை: நாட்டம்தான் தேவை.சிறந்த அறிஞர்கள் குழாம் இந்த சமய சேவையை ஆற்றுகிறார்கள். இந்த பட்டய வகுப்பு ஆத்ம திருப்தியைப் பெறவேண்டும்.*

*இந்த இந்து சமயத்தின் தத்துவங்களை நல்லமுறையிலே எடுத்துரைக்கக் கூடிய தத்துவ விஷயங்களை விநியோகப் படுத்துவதற்கு விஸ்தாரப் படுத்துவதற்கு தேவை இருக்கிறது. விஷயத்திற்கு பஞ்சமில்லை. விஷயத்தைத் தெரிந்துகொள்பவர்களுக்குப் பஞ்சம் இருக்கிறது.*

அந்த நிலையெல்லாம் நீங்கி, தற்போது இங்கே நல்லதொரு தேரினை இழுப்பதுபோல் பலரும் சிறப்பாக ஒருங்கிணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சமயக்கல்வியின் தொடக்கமாக இது அமைகிறது. இதன்மூலம் இறைவனின் கருணைக்கு அனைவரும் பாத்திரர் ஆக வேண்டும்




ஸ்ரீ பெரியவர்களின் உரையைத் தொடர்ந்து, இலங்கையிருந்து இணையவழியாக கலந்துகொணட **கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்** அவர்கள் சிரப்புரை ஆற்றினார். அவர் உரையின் இன்றியமையாத பகுதிகள் வருமாறு:

ஸ்ரீ பெரியவர்கள் முன்னால் பேசுவதற்கு கிடைத்த இந்த வாய்ப்பை என் முதல் பேறாக கருதுகிறேன். நான் பேசுவதை விடவும் ஒரு மணி நேர அளவில் அவர்கள் பேசியதைக் கேட்டதையே யாம்பெற்ற பெரும்பேறாக கருதுகிறேன்/. அவர் சமயங்கள் குறித்த எவ்வளவு ஆழமான புரிதல்களை இவ்வுரையின் வாயிலாக உருவாக்கியிருக்கிறார்கள் என்பதில் பேருவகைக்கொள்கிறேன். அவர்கள் மட்டுமல்லாது தொடக்கத்தில் நோக்கவுரை ஆற்றிய கல்லூரி அதிபர் (முதல்வர்) உரையில் ஆழமான பக்தி நெறியை அறியமுடிந்தது. இவர்கள் எல்லாம் இருக்கும்போது நமது பாரம்பரியத்திற்கு, சைவத்திற்கு அழிவேது என்ற உணர்வு மேலிட்டது.

சைவசித்தாந்தத்தை அறிந்துகொள்ள பல காலம் அலைந்திருகிறேன். பல ஆசிரியர்களிடம் பாடம் கேட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலும் தமிழைச் சரியாக உச்சரிப்பவர்கள் அருகிவிட்டார்கள். தமிழை எவ்வாறு வாசிப்பது என்ற பாரம்பரியத்தை இழந்துவருகிறோம்.

அந்த காலங்களில் தமிழ்ப் படிப்பதற்குப் பல படிநிலைகள் இருந்தன. முதலில் அச்சரம் படிக்கவேண்டும். பிறகு அந்த காலத்து அகராதிகளான நிகண்டு நூல்களைப் படிக்க வேண்டும். பிறகு கருவி நூல்களைப் படிக்க வேண்டும்.

கருவி நூல்களென்றால் இலக்கணம், தர்க்கம். இலக்கணமும் தர்க்கமும் ஒரு பொருளை விரித்துப் புரிந்துகொள்ளவும், சுருக்கி பயன்படுத்தவும் மொழியைப் பயன்படுத்தும் அறிவை வழங்கும். அது முறையாக பெற்றவர்கள் புதிதாக பாடல் கொடுத்தாலும் அதற்கு பொருளுரைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். அதனை இழந்ததினால்தான் இன்றைக்கு ஆசிரியர்கள் புதிதாக ஒரு பாடல் வந்தால் அதனை விளக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள். மாணவர் என்பவர் இன்றைக்குப் படிப்பவர். அதற்கு முந்தைய நாள் படித்துவிட்டு வருபவர் ஆசிரியர் என்பதாக இன்றைக்கு ஆகியிருக்கிறது.

ஒரு கார் மெக்கானிக் கடையிலே வேலை செய்பவன் கருவிகளை எடுத்துக் கொடுத்து பழகுவதினாலையே புதிய கார் ஒன்றையும் பிரித்து பழுது பார்ப்பதுபோல, கருவிநூல் பயிற்சி மொழியை, இலக்கியங்களை நுகர கற்றுக்கொடுக்கின்றன.


நம் மரபிலே, கருவி நூல் பயிற்சிக்குப் பிறகு இலக்கியம் படிப்பது என்பதும் அதற்கும் பிறகு படிப்பது என்பதுமாக ஒன்றிருந்தது. அதைத்தான் தமிழர்கள் மெய்நூல் என்பார்கள். அவை மெய்நூல் என்றால் பிற ப்[ஒய்நூல் என்றாகிறது. அதனைக் கற்பதற்குத் துணை செய்வனவே பிறவற்றைக் கற்றதெல்லாம். அந்த அளவிற்கு தமிழர் வாழ்வில் தத்துவத்திற்கு உயரிய இடம் வழங்கப்பெற்றுள்ளது. அது ஏதோ விளையாட்டான விஷயமில்லை. இன்றைக்கு ஒரு படிப்பு பணம் தருவதை நோக்கி போய்விட்டது. விருப்பம் இல்லாதையும் தம்மோடு தொடர்பில்லாதையும் காலமும் சுமப்பதாக ஆகிவிட்டது.

இன்றைய விஞ்ஞானம் எல்லாம் நமது ஆன்மீகத்தின் தூசுக்குச் சமமானது என நான் உணருகிறேன். அறிவின் முடிவைத் தேடத்தேட புறத்தேடல் எல்லாம் ஒரு முடிவையே தராது. அகத்தேடலே அறிவின் எல்லையாகிய இறைவனைக் காட்டுகிறது.


ஓர் உண்மைச்சமயத்திற்கு அடையாளம் என்ன? என்று கேட்டால், அந்த சமயம் எல்லாராலும் வழிபடத்தக்கதாக இருக்கவேண்டும். எல்லோராலும் வழிபடத்தக்கது என்றால் நாங்க்ஜள் இரண்டு வகையில் செயல்படுகிறோம்.

ஒன்று அறிவால் செயல்படுகிறவர்கள். இன்னொன்று உணர்வால் செயல்படுகிறவர்கள். அப்படி இருண்டு வகையானவர்களும் இறைவனைக் காணத்தக்கதாய் ஒரு சமயம் இருந்தால் அதுதான் நல்ல சமயம். சமயங்களை அளப்பதற்கான தராசு இது. அந்த வகையில் உணர்வு பூர்வமாக இறைவனை அடைவதற்கு தோத்திரங்களையும், அறிவுபூர்வமாக இறைவனை அடைவதற்கு சாத்திரங்களையும் கொண்டது சைவசமயம்.

அமிர்தத்தைக் குடித்தவன் கள்ளையோ குடிப்பான் என்பது போல, நம் சமையத்தின் பெருமதியை அறிந்துகொண்டால் ஒரு பிள்ளை தடுமாறமாட்டான். அதற்காகத்தான் இந்த சைவசித்தாந்த வகுப்பு ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. சுவாமிகளின் கருணையாலே இந்த வாய்ப்பு உங்களுக்குக்கிடைக்கிறது.




சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, பாடத்திட்டக் கையேட்டைப் பெற்றுக்கொண்ட வேதாந்தம்ஜி அவர்கள் காஞ்சி ஸ்ரீ மடத்தின் சமயப்பணிகளையும் தமிழ்ப்பணிகளையும் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசினார். அவற்றின் சிகரம்போல இந்நிகழ்வு அமைவதாக வாழ்த்தி உரைநிகழ்த்தினார்.




தொடர்ந்து, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேனாள் முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன், மயிலம் தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் சு. திருநாவுக்கரசு, திருவையாறு அரசர் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் (ப.நி), முனைவர் ச. திருஞானசம்பந்தம், காஞ்சிபுரம் பச்சியப்பன் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அமுத.இளவழகன், விருத்தாசலம், திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கி. சிவகுமார், திருவாவடுதுறை ஆதீன சித்தாந்த பயிற்சி ஆசிரியர் கோவை ‘சைவசித்தாந்த வித்யாநிதி’ சிவத்திரு. மீ. சிவசண்முகம், முனைவர் செ. உமாமகேஸ்வரி, புலவர் சு. சதாசிவம், புலவர் சரவண. சதாசிவம் உள்ளிட்ட பன்னிரு சித்தாந்த ஆசிரியர்கள் சார்பாக தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறைப் பேராசிரியர் முனைவர் கோ.ப. நல்லசிவம் அவர்கள் தமது வாழ்த்துரையை மகிழ்வுரையையாக வழங்கினார்.



*விழாவின் தொடக்கத்தில், விரிவான நிலையில் ஸ்ரீ மடத்தின் பல்வேறு பணிகளையும் அதன் தொடர்ச்சியாக பண்ணிசை சான்றிதழ்ப் படிப்பு, பண்ணிசை வேள்வி என உலகம் தழுவிய நிலையில் நடத்தியதின் தொடர்ச்சியாக ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி இந்த சைவசித்தாந்தப் படிப்பு தொடக்கத்திற்கு வந்த வரலாற்றையும் விவரித்து ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்* ***கலை. இராம. வெங்கடேசன்*** *அவர்கள் உரையாற்றினார்.*

*இந்த நிகழ்வில் கூகுள் மீட்டிலும் யூடீப் நேரலையிலுமாக நூற்றுக்கணக்கான மெய்யன்பர்கள் கண்டுகளித்தனர். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இப்படிப்பை இணையவழியாகவும் நேரடியாகவும் சேர்ந்து படிக்க நூற்றுக்கும் மேற்பட்டோர் இணைந்திருப்பது குறித்தும் கல்லூரி முதல்வர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தொடக்கத்திலும் நிறைவிலும் தெய்வத்தமிழிசைவாணி ஓதுவாமூர்த்திகள்* ***ரேவதி கிருஷ்ணமூர்த்தி*** *அவர்கள் இறைவாழ்த்து பாடினார். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்* ***ஜெ. இராதாகிருஷ்ணன்*** *தொகுத்து வழங்கின்பார். இப்படிப்பின் பொறுப்பாசிரியராக செயல்படும்* ***திரு. தெய்வசிகாமணி*** *நன்றி கூறினார்.*

